ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2020 ஒத்தோபர் 08 |

## "இலங்கை சமூக பொருளாதார தரவுகள் - 2020" இன் வெளியீடு




இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த வெளியீடான தரவு ஏடான "இலங்கை சமூக பொருளாதாரத் தரவு – 2020" பொதுமக்களின் தகவல்களுக்காக இப்போது கிடைக்கக்கூடியதாகவுள்ளது. தற்போதைய தரவு ஏடானது தொடரின் 43ஆவது வெளியீடாகும்.

எடுத்துச் செல்வதற்கு இலகுவான இத்தரவு ஏடானது நாட்டின் தோற்றப்பாடு, முதன்மைப் பொருளாதார குறிகாட்டிகள் நாட்டின் ஒப்பீடுகள்; சமூக பொருளாதார நிலைமைகள்; மனித வளங்கள் தேசிய கணக்குகள்; வேளாண்மை; கைத்தொழில்; பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்புக்கள்; விலைகளும் கூலிகளும்; வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் சுற்றுலா; வெளிநாட்டு நிதி; அரச நிதி மற்றும் பணம்; வங்கித்தொழில் மற்றும் நிதி போன்ற தகவல்களை உள்ளடக்கியுள்ளது.

நடைமுறைத் தகவல்களின் சமூக பொருளாதாரத் தரவுகளின் ஓர் பரந்தளவான தரவுகளை ஒரு சுருக்க வடிவில் இத்தரவு ஏடானது வழங்குவதால், இது கொள்கை வகுப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், கல்விமான்கள், தொழில்நிபுணர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ள உசாத்துணை மூலமாக இருக்கும்.

இவ்வெளியீட்டினை சென்றல் பொயின்ற் கட்டடத்தில் (சதாம் வீதி, கொழும்பு 01 - தொலைபேசி இல: 011-2444502) அமைந்துள்ள மத்திய வங்கியின் விற்பனை மற்றும் விநியோகக் கருமபீடத்திலும் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்திலும் (58, சிறி ஜெயவர்த்தனபுர மாவத்தை, இராஜகிரிய - தொலைபேசி இல: 011-2477803) மற்றும் மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களிலும் (மாத்தறை, மாத்தளை, நுவரெலியா, கிளிநொச்சி, திருகோணமலை மற்றும் அநுராதபுரம்) ரூ.50/- இனைச் செலுத்திக் கொள்வனவு செய்யமுடியும். அத்துடன் இவ்வெளியீட்டின் இலத்திரனியல் பதிப்பினை மத்திய வங்கியின் வெப்தளத்தின் (http://www.cbsl.gov.lk) ஊடாக அணுகலாம்.